**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| Case No: | | SC.No.79/2023 | |
|---|---|---|---|
| Prosecution Witness: | | PW-10/LW-13 | |
| Name: | திரு. வேல்முருகன் | Taluk: | அரியலூர் |
| S/o. | திரு. பெரியதம்பி | Age: | 55 |
| Occupation: | காவல் உதவி ஆய்வாளர் | Village: | விக்கரமங்கலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **22.07.2026 By Thiru. P. Anbumani, Translator.**

(எதிரி முன்னிலையானார்.)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது விக்கரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த **05.03.2021**ம் தேதியன்று த.பழூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை அடுத்து அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கலைவாணன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்து த.பழூர் காவல் நிலைய குற்ற எண். **130/2021**, சட்டப்பிரிவுகள் **294(b), 307, 323,**

**506(ii) of IPC** ன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். இதன் அசல் முதல் தகவல் அறிக்கையும், வாதியின் வாக்குமூலத்தையும் இணைத்து ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 க்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ஜெகதீசன் அவர்களுடன் உடன் பணியாற்றியவர் என்ற முறையில் அவரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதால், ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் மேற்கொண்டு நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் அன்றைய தினம் 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சம்பத்குமார் மற்றும் குணசேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் முறையே அ.சா.ஆ–6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.** பின்னர் இந்த வழக்கின் புகார்தாரரான கலைவாணன் மற்றும் சாட்சிகள் மனோகரன், செந்தில்குமார், ரவிசந்தரன், சைலஜா, புனிதா, கவிதா, லதா மற்றும் சம்பத்குமார், குணசேகரன் ஆகியோரை விசாரணை செய்து சாட்சிகள் சொன்னபடி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பிறகு சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையிலும், அவரது இரகசிய புலன் விசாரணையின் அடிப்படையில் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரியவந்ததால் எதிரி சங்கரை தேடி வந்ததின் பேரில் 03.05.2021 13.00 மணிக்கு எதிரி மதனத்தூர் கொள்ளிடக்கரை அருகில் நிற்பதாக

கிடைத்த இரகசிய தகவலின் பேரில் அங்கு சென்று ஆஜர் சாட்சிகள் குலோத்துங்கன், இளம்பரிதி ஆகியோர் முன்னிலையில் எதிரியை கைது செய்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். எதிரி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கின் புகார்தாரர் கலைவாணனை அரிவாளால் வெட்டியதை ஒப்புக்கொண்டும், மேலும் இந்த கலைவாணனை வெட்டிய அரிவாளை அடையாளம் காட்டி எடுத்து ஒப்படைப்பதாகவும் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் குலோத்துங்கன், இளம்பரிதி மற்றும் எதிரி சங்கர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் எதிரி மற்றும் அதே சாட்சிகளுடன் எதிரி வீட்டிற்கு பின்புறம் சென்று இவ்வழக்கின் புகார்தாரர் கலைவாணனை வெட்டி பயன்படுத்திய சுமார் 43 செ.மீ நீளமுள்ள கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளின் கையொப்பங்களை பெற்றுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அந்த கத்தி சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அந்த சான்று பொருளை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.** அந்த படிவம் 91 அ.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அதன்பிறகு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி உள்ளார். பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான குலோத்துங்கன் மற்றும் இளம்பரிதி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 22.05.2021ம் தேதி இந்த வழக்கில் காயம்பட்ட புகார்தாருக்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.தீபா அவர்களிடம் விசாரணை செய்து காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் அளித்த காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ–11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மரு த்துவர் இந்த வழக்கின் புகார்தாருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் அன்றைய தினமே இந்த வழக்கினை பதிவு செய்த என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் தனது விசாரணையை முடித்து 22.05.2021 அன்றே எதிரி மீது சட்டப்பிரிவுகள் **294(b), 307, 323, 506(ii) of IPC** ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சாட்சிகளை சொன்னவாறு சொன்ன நேரத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி சொன்னவாறு சொன்ன விதத்தில் புலன் விசாரணை அதிகாரியிடம் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலோ அதன் அடிப்படையில் எந்த ஒரு சான்றுபொருளை கைப்பற்றவில்லை என்றாலோ சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை.**

M.S.மணிமேகலை.,L.L.M.,
கூடுதல் மாவட்ட நீதிபதி,

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

அரியலூர்.